# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 20/2023**

அ.சா.1

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | பூமிநாதன் | Caste: | |
| Father's Name: | ஆறுமுகம் | Calling: | கரிமூட்டம் |
| Village: | வல்லம்பர் தெரு, பார்த்திபனூர் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 48 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 18.09.2025

( 1,2 எதிரிகள் ஆஜர் .)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி பார்த்திபனூரில் உள்ள வல்லம்பர் தெருவில் வசித்து வருகிறேன். கரிமூட்ட தொழில் செய்து வருகிறேன். நான் இந்து தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சார்ந்தவர். சாட்சி முனீஸ்வரி என் மனைவி. சாட்சி முனியசாமி அண்ணன். சாட்சி மணிகண்டன் தம்பி. பெரியப்பா மகன்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் அருங்குளம். சம்பவத்திற்கு முன்பே தெரியும். அவர்கள் இந்து மறவர் சமூகத்தை சார்ந்தவர்கள். கடந்த 02.04.2023ம் தேதி மாலை 6.00 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தேன். ஆஜர் எதிரிகள் இருவரும் பைக்கில் வந்து என்னை பார்த்து விஜயராஜ் அப்பாவா என்று கேட்டார்கள். நான்தான் என்று சொன்னேன். 1ம் எதிரி என்னை பார்த்து ஏன்டா பள்ள புண்டை மகனே, உன் மகனுக்கு அவ்வளவு திமிறா என்று பேசி கம்பால் என் வலது பக்க காது பகுதியில் அடித்தான். எனக்கு காது பகுதியில் நரம்பு கட் ஆகிவிட்டது. காது கேட்காமல் போய்விட்டது. உன்னை வெட்டாமல்

விடமாட்டேன் என்று 1ம் எதிரி சொன்னான். 2ம் எதிரி பைக்கிலேயே உட்கார்ந்திருந்தார். இறங்கவே இல்லை. 2ம் எதிரி அசிங்கமாக பேசவில்லை, திட்டவில்லை, அடிக்கவில்லை. அப்போது என் மனைவி, என் தம்பி, என் அண்ணன் ஓடிவந்து விலக்கிவிட்டார்கள். எதற்காக என்னை விஜயராஜ் அப்பாவா என்று கேட்டார்கள் என்றால் தெரியாது. அப்போது 1ம் எதிரி சாட்சியின் மகன் விஜயராஜ் 1ம் எதிரியை வெட்டியதாக தானாக கூறினார். அந்த சமயத்தில் என் மகன் விஜயராஜ் ஜெயிலில் இருந்தார். எதற்காக என் மகன் ஜெயிலில் இருந்தார் என்றால் 1ம் எதிரியோடு சண்டை ஏற்பட்டதால் என் மகன் மீது வழக்கு போட்டு போலிசார் சிறையில் அடைத்திருந்தார்கள். நான் காயம்பட்டவுடன் பார்த்திபனூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். பின்பு பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலமாக என்னை என் மனைவி கூட்டிசென்றார். பரமக்குடி அரசு மருத்துவமனையில் இருக்கும்போது பார்த்திபனூர் போலிசார் வந்து என்னை விசாரித்தார். நான் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த வாக்குமூலத்தில் நான் கையெழுத்து செய்தேன். என் மனைவி முனீஸ்வரி அறிவேன் சாட்சியாக வாக்குமூலத்தில் கையெழுத்து செய்தார். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1.** எதிரிகள் வந்த பைக் Hero Honda பைக் போல் இருந்தது. பைக்கின் முன் பகுதியில் தேவர் படம் இருந்தது. அந்த பைக்கை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பைக்தான் எதிரிகள் வந்த பைக். 1ம் எதிரி என்னை அடித்த கட்டையை அடையாளம் காண்பிக்க முடியுமா என்றால் முடியும். சாட்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள 1வது அயிட்டமான கட்டையை கொண்டு தாக்கியதாக கூறினார்.

அந்த கட்டை **அ.சா.பொ.1.** 2வது அயிட்டமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள கட்டையால் தாக்கவில்லை என்று கூறினார். இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

இல்லை

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 20/2023**

அ.சா.2

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | முனீஸ்வரி | Caste: | |
| Husband Name: | ஆறுமுகம் | Calling: | இல்லத்தரசி |
| Village: | வல்லம்பர் தெரு, பார்த்திபனூர் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 46 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 18.09.2025

( 1,2 எதிரிகள் ஆஜர் .)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி பார்த்திபனூரில் உள்ள வல்லம்பர் தெருவில் வசித்து வருகிறேன். நான் இந்து தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சார்ந்தவர். சாட்சி பூமிநாதன் என் கணவர். சாட்சி முனியசாமி என் மச்சான். சாட்சி மணிகண்டன் என் கொழுந்தன். என் கணவரின் பெரியப்பா மகன்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் அருங்குளம் கிராமத்தை சேர்ந்தவர்கள். வழக்கு சம்பவத்திற்கு முன்பு என் மகன் விஜயராஜுக்கும் அருங்குளத்தை சேர்ந்த பிரசாந்துக்கும் ஏதோ பிரச்சனை, என்ன பிரச்சனை என்று தெரியாது. பிரசாந்த் ஒரு தரப்பினராகவும் என் மகன் ஒரு தரப்பினராகவும் சண்டை போட்டதில் பிரசாந்தை வெட்டியது சம்பந்தமாக என் மகன் ஜெயிலில் இருந்தான். கடந்த 04.02.2023ம் தேதி மாலை 4.15 மணியளவில் ஆஜர் எதிரிகள் இருவரும் பைக்கில் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். அப்போது என் கணவர் வெளியில் செல்வதற்காக வீட்டு முன்பாக நின்றுகொண்டிருந்தார். அப்போது எதிரிகள் இருவரும்

வந்து என் கணவரிடம் விஜயராஜ் அப்பா யார் என்று கேட்டார்கள். என் கணவர் நான்தான் என்று சொன்னார். 1ம் எதிரி சுபாஷ் என் சாதிக்காரனை வெட்டுற அளவுக்கு அவ்வளவு பெரிய ஆளா உன் மகன் பள்ள புண்டை மகனே என்று திட்டி கட்டையால் என் கணவரின் மண்டையில் ஓங்கி அடித்தபோது என் கணவர் கையால் தடுத்தபோது காதோடு சேர்த்து அடித்ததில் காதிலும் வலியாக இருப்பதாக என் கணவர் சொன்னார். மேலும் என் கணவரின் மணிக்கட்டு பகுதியில் காயம்பட்டது. நாங்கள் கத்தவும் என் மச்சான் முனியசாமி, என் கொழுந்தன் மணிகண்டன் ஆகியோர் ஓடிவரவும் எதிரிகள் அங்கிருந்து செல்லும்போது கட்டையை காண்பித்து உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்துவிட்டு சென்றார்கள். நானும் காயம்பட்ட என் கணவரும் பார்த்திபனூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சை செய்து மேல்சிகிச்சைக்காக பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். சிகிச்சையில் இருக்கும்போது பார்த்திபனூர் போலிசார் வந்து என் கணவரிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த வாக்குமூலத்தில் என் கணவர் கையெழுத்து செய்தார். நான் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியென உள்ள கையெழுத்து என் கையெழுத்துதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2**. என் கணவருக்கு சம்பவத்திற்கு பிறகுதான் காதில் அவ்வப்போது அடைப்பதாக சொன்னார். காதும் கேட்கவில்லை. எதிரிகள் வந்த பைக் Hero Honda ஊதா கலர். வண்டியின் பதிவு எண் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வண்டிதான் அவர்கள் வந்த வண்டி. எதிரிகள் என்

கணவரை அடிக்க ஒரு கட்டையை தான் பயன்படுத்தினார்கள். நீதிமன்றத்தில் அயிட்டம் 1வதாக உள்ள கட்டையை வைத்துதான் 1ம் எதிரி சுபாஷ் என் கணவரை அடித்தான். 2ம் எதிரி அருணும் என் கணவரை கையால் அடித்தான். நாங்கள் பிடித்து இழுத்தோம். செங்கல்லால் எறிந்தான். என் கணவர் மீது படவில்லை. இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

இல்லை

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)